**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.533/2024 நாள்- 15.07.2026

பி.வா.சா.2

இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 44 ன் படி ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்பட்டு சாட்சியின் முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்- சரவணக்குமார் | தந்தையின் பெயர்- |
| விலாசம்- | தாலுகா- |
| வயது- | தொழில் |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கின் பிரதிவாதியின் சகோதரர் ஆவேன். பிரதிவாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை எழுத்து மூலமாக நிரூபண வாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதைப்படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| s.No. | Date | ஆவணங்கள் | பி.வா.சா.ஆ.எண் |
|---|---|---|---|
| 1 | 14.07.2026 | பி.வா.சா.2 ன் 21.07.2026 ம் தேதிய ஆக்ஸிஸ் வங்கி கணக்கு அறிக்கை -- சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.4 |

பிராதை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை :

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

பிரதிவாதி என்னுடைய உடன் பிறந்த சகோதரி. வாதியிடம் அடமானக் கடனாக ரூ.8 லட்சம் கடன் பெற்றிருந்தார் என்றால் சரிதான். அந்த அடமானப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4-ல் அடமானக் கடனுக்காகத்தான் ரூ.5 லட்சம் வழங்கப்பட்டது என்ற வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி செலுத்த வேண்டிய கடனுக்காக தான் வாதிக்கு ரூ.5 லட்சம் காசோலை மூலம் கொடுத்தேன் என்று வாதியிடம் இருந்து ரசீது பெறவில்லைஎன்றால் சரிதான் பி.வா.சா.ஆ.4-ல் கண்ட வரவு செலவு எனக்கும், வாதிக்கும் இடையிலான தனிப்பட்ட வரவு செலவு கணக்கு என்றால் சரியல்ல. தற்போது வரை பிரதிவாதி பெற்ற கடனை திருப்பி செலுத்தும் விதமாக ரூ.5 லட்சம் கொடுத்தேன் என்றும் அதை வாதி தவறாக பயன்படுத்திவிட்டார் என்று வாதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4-ல் கண்ட வரவு செலவு எனக்கும், வாதிக்கும் இடையிலான தனிப்பட்ட வரவு செலவு கணக்கு என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பாஸ்கர் என்பவரிடம் சுமதி என்பவர் மூலமாக ரூ.2 லட்சம் பணம் கொடுத்ததாக கூறும் சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பாஸ்கர் என்பவரிடம் சுமதி என்பவர் மூலமாக எந்த காலத்திலும் பணம் கொடுத்ததில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல என்னுடைய சகோதரி வாதிக்கு கொடுக்க வேண்டிய கடனை ஏமாற்றுவதற்காக நான் தனிப்பட்ட முறையில் வாதிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை என் சகோதரிக்காக கொடுத்தேன் என்று பொய்யாக கூறுகிறேன் என்றும் என் சாட்சியம் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.